பக்கங்கள்: 10

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 11 செவ்வாய்க்கிழமை 26.11.2024 கதிர் 019

### இனி இது ரகசியம் அல்ல!

ரெலோவின் தலைமைக்கு எதிரான கிளர்ச்சி கட்சிக்குள் தொடர்ந்து வலுத்து வருகின்றது. திடீரென்று கட்சியின் மத்திய குழுவை அல்லது பொதுக் குழுவைக் ☞ 2

# தவறிழைத்த தலைமைக் குழுவை திரும்ப திரும்ப கூட்டி தப்ப முடியாது

## தலைவர், செயலாளருக்கு வினோ கடிதம்



நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ரெலோ படுதோல்வியடைந்ததற்கு கட்சியின் தலைமைக் குழுவே காரணம். தவறிழைத்த தலைமைக் குழுவை மீண்டும் மீண்டும் கூட்டித் தப்ப முடியாது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் காட்டமான ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

அவர் கட்சியின் தலைவர், செயலாளர் ஆகியோருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்துள்ளார். பொதுத் தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து ரெலோவின் கட்சித் தலைமைப் பொறுப்புக்கள் மாற்றப்படவேண்டும் என்று கட்சிக்குள்ளேயே கிளர்ச்சி வெடித்துள்ள நிலையில், தலைமைக்கு எதிராகக் குரல் கொடுப்போரை கட்சியில் ☞ 8

## உயர் தரப் பரீட்சைக்கு தடை கோரும் மனு மீது டிசெம்பர் 12இல் விசாரணை

நேற்றுத் தொடங்கியுள்ள க.பொ.த. உயர் தரப் பரீட்சையை தடுத்து நிறுத்தும் வகையில் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பிக்கக்கோரி மாணவி ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை டிசெம்பர் 12 விசாரணைக்கு எடுப்பது ☞ 2

### எதிர்க்கட்சி தலைவர் ஆசன விவகாரம்

## மன்னிப்பு கேட்டார் எம்.பி. அருச்சுனா

### தன்னைப் புலி என்றது வருத்தம் என்றும் தெரிவிப்பு

பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வின்போது எதிர்க்கட்சித் தலைவர் ஆசனத்தில் அமர்ந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அருச்சுனா நடந்த சம்பவத்திற்கு மன்னிப்பு கோரியுள்ளார். ஊடகங்கள் தன்னைப் புலி என்று கூறியது தனக்கு ☞ 8

### பிரான்ஸ் அழைத்துச் செல்வதாக ஏமாற்றி

# யாழ். இளைஞர்கள் ரஷ்ய ராணுவத்தில் பலவந்தமாக சேர்ப்பு

### ஆதாரத்துடன் பொலிஸில் முறைப்பாடு





யாழ்ப்பாணம், குருநகர் பகுதியை சேர்ந்த 25 வயது இளைஞர் சுற்றுலா விண்ணப்பத்தின் ஊடாக பிரான்ஸ் நாட்டிற்கு சென்ற ☞ 2

## பொலிஸ் பாதுகாப்பை கேட்கிறார் அருச்சுனா

### வெளியே நடமாட முடியாமல்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அருச்சுனா தனக்குப் பொலிஸ் பாதுகாப்பு தரும்படி கோரிக்கை விடுத்துள்ளார். பத்தாவது நாடாளுமன்றம் முதல் தடவையாகக் கூடியபோது எதிர்க் கட்சித் தலைவரின் ஆசனத்தில் அமர்ந்து, படைக்கல சேவிதர்கள் தெரிவித்த பின்னரும் அங்கிருந்து அகல மறுத்த சம்பவத்தின் பின்னர் தன்னால் சுதந்திரமாக ☞ 2

## நீதிமன்றில் சரணடைந்தார் முன்னாள் அமைச்சர் டக்ளஸ்

வழக்கு ஒன்றில் சாட்சியமளிக்க ஆஜராகாத காரணத்தினால் கைது செய்யுமாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் தனது சட்டத்தரணிகள் ஊடாக சரணடைந்தார்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த நீதவான், டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை மீளப்பெறுமாறு உத்தரவிட்டார்.

அதன்பின், பிணையில் வெளிவந்த தேவானந்தாவை அடுத்த நீதிமன்ற திகதியில் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டது.

2016ஆம் ஆண்டு தலா 10 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு காசோலைகளை வழங்கினார் என்று வெள்ளவத்தை வர்த்தகர் ☞ 2

## புதிய வர்த்தக அமைச்சர் மீது பொலிஸாரால் குற்றச்சாட்டு

மோசடி தொடர்பில் புதிய வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்கவுக்கு எதிரான விசாரணைக்காக அவரைப் பல தடவைகள் அழைத்தும் அவர் வரவில்லை என்று பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர். தொலைபேசி அழைப்புகள் மற்றும் பல கடிதங்கள் அனுப்பியும் அவர் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பிலான விசாரணைக்கு அவர் இதுவரை வரவில்லை என ☞ 8

## நாணய நிதியத்துடனான இணக்கத்துக்கு பாராட்டு

### முன்னாள் இராஜாங்க அமைச்சர் வழங்கினார்

அரசுத்தலைவர் அநுரகுமார தலைமையிலான ஆளும்தரப்பு சர்வதேச நாணய நிதியத்துடன் மூன்றாம் கட்ட மீளாய்வின் பின்னரான ஊழியர் மட்ட இணக்கத்திற்கு வந்துள்ளமை குறித்து முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

விரிவாக்கப்பட்ட நிதிவசதியின் (சிய்ய்) 3ஆவது மதிப்பாய்வை வெற்றிகரமாக ☞ 2

## அமைச்சர்களுக்கு இம்முறை புதிய வாகனங்கள் கிடையாது

தேசிய மக்கள் சக்தி அமைச்சர்களுக்கு புதிய வாகனங்கள் எவையும் வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆளும் தரப்பில் அமைச்சர்கள் பயன்படுத்திய வாகனங்களே புதிய அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் பயன்பாட்டுக்கும் வழங்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமைச்சர்கள் தவிர அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது மக்கள் பணியை ஆற்ற ☞ 2

## அரசியல் பழிவாங்கலுக்கே சி.ஐ.டி. பயன்படுத்தப்படுகிறது

### சுஜீவ சேனசிங்க குற்றச்சாட்டு

அரசியல் பழிவாங்கல்களுக்காக ஆளும்தரப்பால் குற்றப்புலனாய்வுத்திணைக்களம் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. இது நாட்டின் பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும். எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பேன் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பொறுப்பேற்கப்பட்ட அவரது சொகுசு கார் நேற்று கோட்டை நீதிமன்றத்தின் ☞ 2

# மடத்துவிளாங் குளம் உடைப்பு 82 ஏக்கர் நெல் வயல் பாதிப்பு

ஓமந்தை, பாலமோட்டை பகுதியில் அமைந்துள்ளமடத்துவிளாங்குளஅணைக்கட்டு கனமழை காரணமாக நேற்று உடைத்தது. குளத்திலிருந்து பெருகும் வெள்ளத்தால் இதன் கீழ் பாசனம் பெற்று வந்த 82.84 ஏக்கர் விவசாய நிலம் நீரில் முழ்கியுள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள காற்றமுத்தத் தாழ்வு நிலை காரணமாக வடக்கு, கிழக்கில் கன மழை பெய்து வருகின்றது. இதனால் வவுனியாவில் உள்ள குளங்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. தொடர்ந்து பெய்யும் மழை மற்றும் நீர்வரத்து அதிகரிப்புக் காரணமாக ஓமந்தை, பாலமோட்டை கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள மடத்துவிளாங்குளத்தின் குளக்கட்டு உடைப்பெடுத்தது.

இதனால் பெரும்போகச் செய்கை பண்ணப்பட்டுள்ள 82.84 ஏக்கர் விவசாய நிலம்நீரில்முழ்கியுள்ளது, அப்பகுதிக்கானவீதிப் போக்குவரத்தும் பாதிப்படைந்துள்ளது. இந்தக் குளம்நீண்டகாலமாகப்புனரமைக்கப்படாததே அணைக்கட்டுஉடைப்பெடுத்ததற்குக்காரணம் என்றுவிவசாயிகள்தெரிவித்தனர். குளக்கட்டில் சிறிய திருத்த வேலைகள் மட்டுமே கடந்த காலங்களில் தம்மால் செய்யப்பட்டதாகவும் குளக்கட்டு சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்றும் அவர்கள் கூறினர்.

அணைக்கட்டு உடைத்ததை அடுத்து தண்ணீர் வெளியேறுவதைக் கட்டுப்படுத்த இராணுவத்தினர் கமக்கார அமைப்பினருடன் இணைந்து முயற்சி செய்தபோதும் அது பயனளிக்கவில்லை. தண்ணீர் தொடர்ந்தும் வெளியேறி வருகின்றது.

## இனி இது .....

கூட்டும்படி உறுப்பினர்கள் கிளர்ந்தெழத் தொடங்கியுள்ளார்கள். அதிலும் தலைமை கட்சியிலிருந்து துரத்திவிடத் துடிக்கும் நபர்களே இந்த மத்திய குழு அல்லது பொதுக் குழுவைக் கூ-ட்டும்படி மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்கள். ரெலோவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராத லிங்கமும் இந்தக் கோரிக்கையுடன் ஒரு கடிதத்தை தலைவருக்கும் செயலருக்கும் நேற்று அனுப்பி வைத்திருக்கிறார்.

எதற்காக இப்படி, என்னதான் விவகாரம் என்று கேட்டுப் பார்த்தேன். பொரிந்து தள்ளிவிட்டார்கள். ரெலோவிற்குள்ளும் தலைமைக் குழு, மத்திய குழு, பொதுக் குழு என்று மூன்று நிர்வாகக் குழுக்கள் உண்டு. தலைமைக் குழுவில் தலைவர் செல்வம், செயலாளர் ஜனா, பொருளாளர் சுரேன் மற்றும் இவர்களின் கையாள்களான பிரான்ஸில் இருக்கும் கே.கே.ஆர். அம்பாறையில் இருக்கும் கமலராஜன் போன்றவர்கள்தான் இருக்கின்றனர். இந்தக் குழுவில் தலைவர், செயலாளர் எல்லாம் இருந்தாலும் இந்தக் குழுவை இயக்குபவர் சுரேன் தானாம். அவரது விருப்பப்படி, அவர் சொல் கேட்டுத்தான் மற்றவர்கள் நடக்கிறார்களாம். அதனால்தான் மத்திய குழுவை அல்லது பொதுக் குழுவைக் கூட்டு என்று நிற்கிறார்கள் கிளர்ச்சியாளர்கள். ஏனென்றொல் அந்தக் குழுக்களில் தலைமைக்குப் பெரும்பான்மை இல்லை. அங்கு அவர்கள் நினைத்ததைச் சாதிக்க முடியாதாம். இவர்கள் கட்சியைவிட்டுத் தூக்க முயலும் விந்தன், ஹென்றி போன்றவர்களை மத்திய குழுவிலோ பொதுக் குழுவிலோ வைத்து தூக்க முடியாது என்பதால்தான் அந்தக் குழுக்களைக் கூ-ட்டுமாறு அவர்கள் கோருகின்றனராம்.

அப்படி மத்திய குழுவையோ பொதுக் குழுவையோ கூட்டினால் அது தலைமைக்கு எதிரான முடிவுகளுக்கும் வழிவகுக்கக்கூடும் என்பதால் தமது ஆதரவாளர்களைக் கொண்டு தலைமைக் குழுவிற்குள்ளேயே இந்த மாதிரியான விவகாரங்களை முடித்து தமக்குப் பிடிக்காதவர்களை கட்சியிலிருந்து தூக்கிக் கடாசி விடலாம் என்று பார்க்கிறார்களாம். அதற்கு விடுவதில்லை என்று மல்லுக்கட்டிக்கொண்டு நிற்கிறார்கள் கிளர்ச்சியாளர்கள். 35, 40 வருடங்களாகக் கட்சித்தலைமையைத்தமதுசொந்தச்சொத்தாக வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு அதனை விட்டுக்கொடுக்க இலகுவில் மனம்வராதுதான். பார்க்கலாம் என்ன நடக்கிறது என்று!

.....................................................

ஒரு சாவகச்சேரி மருத்துவமனையை வைத்துதமிழ்மக்களிடம்சிலமாதங்களிலேயே புகழ்பெற்று நாடாளுமன்ற உறுப்பினரும் ஆகிவிட்ட மருத்துவர் அருச்சுனா, ஒரே நாளில் நாடாளுமன்றத்தில் கம்பு சுத்தியதன் மூலம் ஒட்டுமொத்த சிங்கள மக்களும் நன்கறிந்த அரசியல்வாதியாகிவிட்டார்.

இப்போது சிங்கள ஊடகங்களுக்கு "தமிழ் தீவிரவாத" தீனி அவர்தான். நேற்று அவரது முகப் புத்தக நேரலை ''பிரபாகரன் என் கடவுள்" என்றார் அருச்சுனா என்ற தலைப்பில் தெற்கு சிங்கள, ஆங்கில ஊடகங்களில் சூடு பிடித்திருந்தது.

மாவீரர் நாளையொட்டி சிங்கள மக்களுக்கும் புரியட்டும் என்றோ என்னவோ மருத்துவர் ஆங்கில நேரலை ஒன்றைச் செய்திருந்தார். வழக்கம்போலவே அதில் அவர் தான் நினைத்ததை எல்லாம் சொன்னார். அப்போதுதான் இடையில் பிரபாகரன் என் கடவுள் என்றார். கையோடு, தான் மருத்துவராவதற்குசுமந்திரன்தான்வழக்காடித் தந்தார் என்றும் சொல்ல மறக்கவில்லை.

ஆகமொத்தத்தில்தன்னைநாடாளுமன்றம் அனுப்பிய யாழ்ப்பாணத்து மக்களுக்கான தன் பணியை மருத்துவர் செவ்வனே செய்து வருகின்றார் என்பதறிந்து மகிழ்வோமாக!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேளை கட்டாயமாக ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யாவுக்கு 04.10.2024 அன்று பயணித்த குறித்த இளைஞர் அவரது சகோதரி பிரான்ஸ் நாட்டில் இருப்பதால் அவரது இடத்திற்கு தொழில் நிமித்தமாக செல்ல முயர்ச்சித்துள்ளார். ரஷ்ய விமான நிலையத்தில்தரை இறங்கி அங்கிருந்து முகவர் ஊடாக பிரான்ஸ் நாட்டுக்கு செல்ல வேண்டும் என இளைஞருக்கு கூறப்பட்டிருந்தது என்று உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

ரஷ்யவிமானநிலையத்தில்தரையிறங்கிய இளைஞனுடன் முல்லைத்தீவை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர்ஒருவரும்குருநகர்பகுதியைசேர்ந்த இளைஞர் ஒருவரும் பயணித்துள்ளனர். இவர்கள் அனைவரும் ரஷ்ய விமான நிலையத்தில் இராணுவ அதிகாரி ஒருவர் ஊடாக பிரான்ஸ் நாட்டிற்கு செல்ல வேண்டுமென இவர்களை கூட்டிச் சென்ற முகவர் தெரிவித்துள்ளார்.

அதனை அடுத்து அங்குள்ள இராணுவ முகாமில் இவர்களைத் தங்க வைத்து இவர்களுக்குரஷ்யஇராணுவத்தின்சீருடைகள் வழங்கி 15 நாட்கள் கட்டாயமாக பயிற்சி வழங்கிய பின்னர் உக்ரையின் எல்லையில் போருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த விடயம் தொடர்பாக குருநகர் பகுதியை சேர்ந்த கோமஸ் அதிஸ்ரராஜா மிதுர்ஷன் 25 வயது இளைஞன் தாயாருக்கு தனது புகைப்படங்களைத் பகிர்ந்து தாம் ரஷ்ய இராணுவத்தில் கட்டாயமாகச் சேர்க்கப்பட்டது குறித்துத் தெரியப்படுத்தியுள்ளார்.

இதனைஅடுத்துதாயார்தனதுமகனையும் ஏனையவர்களை மீட்பதற்கு ஆளுநர் ஊடாக ஜனாதிபதிக்கு மனு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

பிரான்ஸ் பயணத்திற்காக முகவர் ஒருவருக்கு ஒவ்வொருவரும் தலா 60 லட்சம் ரூபா வரையான பணத்தைச் செலுத்தியுள்ளனர். இது தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுஒன்றும்பதிவுசெய்யப்பட்டுள்ளது.

## பொலிஸ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடமாட முடியாத நிலை உள்ளதாகத் தெரிவித்தே அவர் பொலிஸ் பாதுகாப்புக் கேட்டுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று ஆரம்பமான புதிய உறுப்பினர்களுக்கான திசைமுகப்படுத்தல் அமர்வின் முதல் நாளின் போதே மருத்துவர் அருச்சுனா தனக்குப் பாதுகாப்பு வழங்குமாறு கோரிக்கை விடுத்தார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனக்குப் பொலிஸ் பாதுகாப்பு தேவை எனில் அதற்காகப் பாதுகாப்பு அமைச்சிடம்தான் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவேண்டும் என நாடாளுமன்ற பிரதி செயலாளர் சமிந்த குலரத்ன தெரிவித்துள்ளார்.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு பொலிஸ் பாதுகாப்பை வழங்குவதோ பாதுகாப்புக்கான கைத்துப்பாக்கியை வழங்குவதோ நாடாளுமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழ் அடங்காது என்பதால் பாதுகாப்பு அமைச்சிடம் இருந்தே அவற்றைக் கோர முடியும் என்று அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் மதிப்பீட்டின்படி பொலிஸ் பாதுகாப்பு அல்லது கைத்துப்பாக்கி வழங்கப்பட முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

## நீதிமன்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவருக்கு எதிராக டக்ளஸ் தேவானந்தா குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், வர்த்தகரான சுப்பிரமணியம் மனோகரனுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கில் சாட்சியம் வழங்கப் பல தடவைகள் அழைக்கப்பட்டபோதும் வரவில்லை என்ற காரணத்தால் டக்ளஸைக் கைதுசெய்யும்படி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

## உயர் தரப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, முர்து பெர்னாண்டோ மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய அமர்வு முன் நேற்று இந்த மனு பரிசீலிக்கப்பட்டது.

இந்த முறை ஜி.இ.சி. உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவி ஹன்சனி அழகோன் தாக்கல் செய்த இந்த மனுவில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், கல்வி அமைச்சர் உள்ளிட்டோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஜி.இ.சி. 39/2023 சுற்றறிக்கையில் உயர்தரப் படிப்புக்கான காலம் 107 கல்வி நாட்களை நிறைவு செய்யவேண்டும் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய மனுதாரர், இந்தக் கல்விக் காலத்துக்கு முன்னதாக உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டமை தவறு என்று குறிப்பிடுகின்றார்.

உயர்தரப் பரீட்சை நடத்தப்படுவதால், ஏறக்குறைய 300,000 மாணவர்கள் பெரும் அநீதிக்கு ஆளாகியுள்ளதாகவும், மேலும் பாடத்திட்டத்தை பூர்த்தி செய்ய முடியவில்லை எனவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

மனுவை நேற்றுப் பரிசீலித்த நீதிமன்றம் அதனை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டதுடன் டிசெம்பர் 12க்கு வழக்கை ஒத்திவைத்தது.

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவுக்கமைய விடுவிக்கப்பட்டது. அது முறையாக இறக்குமதி செய்யப்பட்டதாக நீதிவான் நம்பிக்கை கொண்டதை அடுத்தே அதனைபிணையில்விடுவிக்கஉத்தரவிட்டார். அதன் பின்னர் நீதிமன்ற வளாகத்தில் செய்தி வெளியிட்ட சுஜீவ சேனசிங்க தெரிவித்ததாவது:

ஜனாதிபதி உட்பட ஆளும்தரப்பே எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு பொறுப்புக் கூறவேண்டும். பொலிஸார் செயற்பட விதம் தொடர்பில் என்னிடம் மன்னிப்பு கோரவேண்டும். தேர்தலுக்கு 10 நாட்கள் இருக்கும்போது இந்தச் செய்தியைப் பிரசித்தப்படுத்தினர். என்னை சிக்க வைப்பதற்காககுற்றப்புலனாய்வுதிணைக்களம் மேற்கொண்ட முயற்சிக்கு 100 இலட்சமாவது செலவு ஏற்பட்டிருக்கும்.

தொடர்ச்சியாக இவ்வாறான நிர்வாகம் முன்னெடுக்கப்பட்டால் இந்த நாட்டுக்கு சிறந்த எதிர்காலம் அற்றுப் போகும். நாம் நியாயமான அரசியலிலேயே ஈடுபடுவோம். எமது விமர்சனங்கள் அரசியல் ரீதியானவையாக இருக்குமே தவிர தனிப்பட்ட ரீதியிலானதாக இருக்காது. ஆனால்இவ்வாறானசெயற்பாடுகள் ஊடாக எனது அரசியல் பயணத்தை ஆளும்தரப்பால் தடுக்க முடியாது.

எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக நான்சட்டநடவடிக்கைஎடுப்பேன். பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும், பதவி உயர்வுகளுக்காகவும்எந்தவொருஅதிகாரியும் இவ்வாறு செயற்படக் கூடாது. அரசியல் பழிவாங்கலுக்காக முன்னெடுக்கப்பட்ட மிகவும் மோசமான செயல் இதுவாகும். அரசியல் பழிவாங்கல்களுக்கு இவ்வாறு சீ.ஐ.டி. பயன்படுத்திக் கொள்ளப்பட்டால் அது நாட்டின் பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயலாகும் என்றார்.

## நாணய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடித்ததைக் குறித்து அவர் தனது பாராட்டைத் தெரிவித்து விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த வெற்றியானது பொருளாதார மீட்சியைநோக்கியஇலங்கையின்பயணத்தை வலுப்படுத்தும் வகையில் நான்காவது தவணை நிதி உதவியை திறப்பதற்கு வழி வகுத்திருக்கிறது.

2024 ஜனவரி முதல் ஜூன் வரையான காலப்பகுதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்ஆட்சிக்காலத்தில்இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இக்கட்டான காலப்பகுதியில் ஒப்புக்கொள்ளப்பட்ட இலக்குகளை சந்தித்தது மட்டுமன்றி, அதையும் தாண்டிப் பல துறைகளில் முன்னேற்றத்தை எட்டினோம். அதனைப் பிரதிபலிக்கும் வகையில், பணியாளர் மட்ட ஒப்பந்தத்தை எட்டுவதற்கு இலங்கைக்கு முழு நம்பிக்கையை வழங்கியது.

பொருளாதாரத்திற்குப் புத்துயிர் அளிக்க நாங்கள் அறிமுகப்படுத்திய விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டமானது, தற்போதைய ஆளும் தரப்பால் முதலில் எதிர்க்கப்பட்டது, தற்போது நாட்டின் சவால்களைச் சந்திக்க அது மிக முக்கியமானது என்பதை ஆளும்தரப்பு ஏற்றுக்கொண்டுள்ளமை புலனாகின்றது.

இலங்கையின் பொருளாதார ஸ்திரத் தன்மை மற்றும் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு ஒழுக்கமான கட்டமைப்பை பின்பற்றுவதன் முக்கிய முக்கியத்துவத்தை இது எடுத்துக்காட்டுகிறது – என்று ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

## அமைச்சர்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிபொருள் சிக்கனமுள்ள அரச வாகனங்கள் வழங்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். ஆளும் தரப்பின் 159 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உத்தியோகபூர்வமாக ஏதாவது ஒரு வாகனம் கிடைக்கவுள்ளது.

அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச பணிக்காக தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டங்களுக்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியிருப்பதால் அவர்களுக்கும் உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்க ஆளும்தரப்புதீர்மானித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். எவருக்கும்சொகுசுவாகனங்கள் வழங்கப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

பராமரிப்பதற்கு அதிக செலவு பிடிக்கும் 344 அரச வாகனங்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவற்றில் வி8 போன்றசொகுசுகார்வகைகள் இருப்பதாகவும், அவற்றை பராமரிக்க அரசு அதிக பணம் செலவழிக்க வேண்டியிருப்பதால் அவற்றை ஏலத்தில்விற்கமுடிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த சொகுசு வாகனங்களை பொது ஏலத்தில் விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தில் இருந்து அரச நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகனங்களை வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு உத்தியோகபூர்வ வாகனம் வழங்கும் போது எரிபொருள் சிக்கனம் கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய காரணியாக கருதப்படும் என்றும், எவருக்கும்எரிபொருளைஅதிகளவில் பயன்படுத்தும் சொகுசு வாகனங்கள் வழங்கப்படமாட்டாது எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சொகுசுவாகனங்களைஏலத்தில்விற்பதன் மூலம் கிடைக்கும் பணம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்களைக் கொள்முதல் செய்யப் போதவில்லை என்றால், ஜனாதிபதி அலுவலகத்திற்கு சொந்தமான சில வாகனங்களை விடுவிப்பதற்கான பேச்சு தற்போது நடைபெற்று வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நாடாளுமன்ற முறைமை மிகவும் முக்கியமானது

## புதிய எம்.பிக்களிடம் சபாநாயகர் வலியுறுத்து

பொதுமக்களின் அபிலாஷைகள் மிகவும் தீவிரமடைந்திருக்கும் நேரத்தில் அந்த அபிலாஷைகளைநிறைவேற்றநாடாளுமன்ற முறைமையைப் பிரயோகப்படுத்துவது மிகவும் முக்கியமானது என்று சபாநாயகர் கலாநிதி அசோகரன்வல புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரிவித்தார்.

பத்தாவது நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட புதிய உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட திசைமுகப் படுத்தல் செயலமர்வை நேற்று தொடக்கிவைத்து உரையாற்றும்போதே சபாநயாகர் இதனைக் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் பல்வேறு கட்சிகள் மற்றும்அரசியல்பிரதிநிதிகள்மேற்கொள்ளும் கலந்துரையாடல்கள் ஊடாக மக்களுக்கு சேவையை செய்வதற்கு நாடாளுமன்ற பாரம்பரியம், அரசமைப்பு, நாடாளுமன்ற நிலையியற் கட்டளை போன்றவை குறித்து நல்ல புரிதலும், அறிவும் அவசியம் என்பதால் இவ்வாறான செயலமர்வை ஏற்பாடு செய்வது மிகவும் அவசியமானது எனக் குறிப்பிட்ட சபாநாயகர், இதனை ஏற்பாடு செய்த நாடாளுமன்ற செயலாளர் நாயகம் உள்ளிட்ட செயலகத்தின் பணியாளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

இச்செயலமர்வில் கலந்துகொண்ட பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய குறிப்பிடுகையில், நாட்டு மக்கள் மிகவும் பலமான நாடாளுமன்றத்தைத் தெரிவுசெய்திருக்கும் சூழ்நிலையில், மக்களின் எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்றுவதே அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் பிரதான எதிர்பார்ப்பாக இருக்கவேண்டும் என்றார். நாடாளுமன்றம் தொடர்பில் மக்களின் அபிப்பிராயத்தை மாற்றும் பொறுப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட அரசியல், சமூக பரிமாற்றம் பொது மக்கள் மத்தியில் காணப்பட்ட அரசியல் முதிர்ச்சியை எடுத்துக் காட்டுவதாகச் சுட்டிக்காட்டிய பிரதமர், இந்தச் செய்தியைப் புரிந்துகொண்ட நபர்கள் என்ற ரீதியில் நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பெரும் பொறுப்பு இருப்பதாகக் கூறினார். இதற்கு அமைய அர்ப்பணிப்புடன் பணியாற்ற இந்தச் செயலமர்வு உதவியாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

இம்முறை நாடாளுமன்றம் இந்த நாட்டின் வரலாற்றில் தனித்துவமிக்க நாடாளுமன்றம் எனவும், பெண்களின் அதிகூடிய பிரதிநிதித்துவமான 22 பெண் உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றமாக அமைவது சாதகமான முன்னேற்றம் எனவும் அவர் தெரிவித்தார்.

திறந்த நாடாளுமன்றம் என்ற கருத்தை வலுப்படுத்துவதன் மூலம் மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்பை பிரஜைகளுக்கு நெருக்கமாக கொண்டு செல்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற ரீதியில் நாடாளுமன்ற முறைமை மற்றும் அதன் மரபுகள் தொடர்பில் நன்கு புரிந்துகொள்ளவேண்டும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களில் 162 பேர் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பது பத்தாவது நாடாளுமன்றத்தின் தனிச்சிறப்பு என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார். நாடாளுமன்ற முறைமைகள் தொடர்பில் சிறந்த அறிவும் அனுபவமும் கொண்ட அதிகாரிகளின் வளப்பங்களிப்பின் ஊடாக நடத்தப்படும் இச்செயலமர்வை அனைத்து உறுப்பினர்களும் சிறப்பாகப் பயன்படுத்துவார்கள் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இங்கு நாடாளுமன்ற முறைமைகள் மற்றும் நடைமுறைகள் பற்றி நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர விளக்கமளித்தார். நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை தொடர்பில் நாடாளுமன்ற பணியாட் தொகுதியின் பிரதானியும், பிரதிச்செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன விளக்கமளித்தார்.

இந்தச் செயலமர்வில் பிரதிச் சபாநாயகர் வைத்தியகலாநிதி மொஹொமட் ரிஸ்வி சாலி, குழுக்களின் பிரதித் தவிசாளர் ஹேமாலி வீரசேகர, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்னாயக, ஆளும் கட்சியின் முதற்கோலாசான் அமைச்சர் வைத்தியகலாநிதி நலிந்த ஜயதிஸ்ஸ, நாடாளுமன்ற செயலாளர் நாயகம், பிரதிச் செயலாளர் நாயகம், உதவிச் செயலாளர் நாயகம், நாடாளுமன்ற செயலகத்தின் திணைக்களங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

செயலமர்வின் முதலாவது நாளான நேற்று 168 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர். புதிய நாடாளுமன்றம் ஆரம்பிக்கப்படும்போது சம்பிரதாயபூர்வமாக மேற்கொள்ளப்படும் செயற்பாடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் செயலமர்வு இன்று மற்றும் நாளை ஆகிய தினங்களிலும் தொடரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குவைத் சிறைகளில் இருந்து 34 கைதிகள் திரும்பி வந்தனர்

குவைத் மத்திய சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 34 இலங்கை கைதிகள் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

இந்த கைதிகள் நேற்றையதினம் பிற்பகல் குவைத்திலிருந்து சீ - 17 விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

குவைத் மற்றும் இலங்கைக்கு இடையில் 2007ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், குவைத் மத்திய சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 104 இலங்கை கைதிகளில் 34 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல்கள், கொலை மற்றும் கொள்ளை முதலான குற்றங்கள் தொடர்பில் அந்நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் குவைத் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை கைதிகளே நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த கைதிகளை அழைத்துச் செல்வதற்குச் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அதிகாரிகள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்திருந்தனர்.

# மின்சாரத் துறை அபிவிருத்திக்கு 200 மில். டொலர் கடன் உதவி

## ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குகிறது

இலங்கையின் மின்சாரத் துறையின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 200 மில்லியன் டொலர் கடனுதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

இதன் ஊடாக மின்சாரம் பரிமாற்றம் மற்றும் விநியோக வலையமைப்பின் நம்பகத் தன்மையை மேம்படுத்துவதற்கும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அதிக அளவில் ஒருங்கிணைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில், வீடுகளுக்கு 100சதவீதமான மின்சார விநியோகத்தை இலங்கை அடைந்தது. மேலும், இந்த நாட்டில் மின்சாரத் தேவை 2023 ஆம் ஆண்டில் அதிகபட்சமாகப் பதிவு செய்யப்பட்டதுடன், அதன் அளவு 2800 மெகாவோட் ஆகும். புதுப்பிக்கத்தக்க எரிசக்தியும் அதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தது.

இது 2030 ஆம் ஆண்டில் கணிசமாக வளரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில், நாட்டின் மின்சார உற்பத்தியில் சுமார் 50 சதவீதமான அனல் மின் நிலையங்களால் பங்களிக்கப்பட்டது. புதிய திட்டங்கள் மூலம் மின் உற்பத்தியில் புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களின் பங்களிப்பை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# ஐ.தே.க. தலைமையை சஜித்துக்கு தர தயாரென்றால் இணைவோம்

## ஹர்ஷன தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை சஜித் பிரேமதாசவிடம் ஒப்படைக்க ரணில் விக்கிரமசிங்க தயாராக இருந்தால், மீண்டும் சிறிகொத்தவுக்கு வருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

அவர் கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அனைத்து வலதுசாரி அரசியல் செய்யும் குழுக்களுக்கும் ஒன்றிணைய வேண்டும் என்று நாங்கள் எதிர்ப்பார்க்கிறோம். ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் இக்கட்சியுடன் ஒன்றிணைந்து இந்தப் பிரிவினையை இல்லாதொழித்து எதிர்காலத்தில் ஒரே வேலைத்திட்டத்தை முன்வைக்க பாடுபடவேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறோம்.

ஐக்கிய மக்கள் சக்தி, ஐ.தே.க. குழுக்களை ஒன்றிணைத்துக் கொண்டு எதிர்காலத்தில் பயணிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். ரணில் விக்ரமசிங்க இலங்கையில் இல்லை. அவர் வந்ததும் நாங்கள் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

# பாதாள உலகச் செயற்பாடுகளை ஒழிக்கவேண்டியது எம் பொறுப்பு

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல

நாட்டை அழிக்கும் பதாள உலக செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் என்பவற்றை முற்றாக ஒழிக்க வேண்டிய பொறுப்பு எமது ஆளும்தரப்புக்கு காணப்படுகிறது என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

அவர் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான பிரதி அமைச்சராக நேற்றையதினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் காணப்பட்ட பலவீனமே கடந்த காலங்களில் சட்ட விரோத செயற்பாடுகள் அதிகரித்ததில் செல்வாக்கு செலுத்தியது. நாட்டில் போதியளவு சட்டங்கள் நடைமுறையிலுள்ளன. ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் உள்ளன. அது மாத்திரமின்றி சட்டங்கள் முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டன.

தேசிய மக்கள் சக்தி ஆளும் தரப்பில் அதற்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது. நாட்டை அழிக்கும் பதாள உலக செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் என்பவற்றை முற்றாக ஒழிக்க வேண்டிய பொறுப்பு எமது ஆளும் தரப்புக்கு காணப்படுகிறது.

இவற்றை ஒழிப்பதற்கு அரசியல் ரீதியில் காணப்பட்ட தடைகள் தற்போது நீங்கியுள்ளன. எனவே இனியும் நாட்டில் சட்ட விரோத போதைப்பொருட்கள் இவ்வாறான காரணிகளால் கைப்பற்றப்படவில்லை எனக் காரணம் கூற முடியாது. அப்பாவி மக்களுக்கு நியாயத்தை வழங்க முடியவில்லை எனில் நாம் பதவிகளை வகிப்பதில் பிரயோசனமில்லை என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com

இணையம் - onlinekathir.com


## உடனடி நடவடிக்கை தேவை

ரஷ்ய – உக்ரைன் போரில் இலங்கையர்கள் பங்கேற்பு என்கிற செய்தி புதிதல்ல. கடந்த ஒரு வருட காலத்திற்கும் மேலாகவே இந்தச் செய்திகள் அடிபட்டு வருகின்றன. ஆனால், ஆள்கடத்தல் பேர்வழிகளால் ஏமாற்றப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட தமிழ் இளைஞர்கள் ரஷ்ய இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்பது அதிர்ச்சி தரக்கூடிய செய்தியாக இருக்கின்றது.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போரில் அளவுக்கு மீறிப் பெருப்பிக்கப்பட்ட படையினர், பின்னர் மெல்ல மெல்ல அதிலிருந்து விலக்கப்பட்டு வருகின்றனர். அப்படி விலகியவர்கள் ரஷ்ய – உக்ரைன் போரில் தமது சுய விருப்பத்தின் பேரில் பணத்திற்காகச் சென்று இணைந்தார்கள் என்பதுதான் இதுவரையில் கிடைத்திருக்கக்கூடிய செய்தி. அப்படி தமது விருப்பத்தின் பேரில் போருக்காகவே சென்று மாட்டிக்கொண்ட முன்னாள் படையினர் பின்னர் விரும்பினாலும் போர்க் களத்தில் இருந்து மீளமுடியாமல் சிக்கிக்கொண்டுள்ளனர் என்கிற அவலம் பெரியளவில் பேசு பொருளாக இருந்தது.

இவர்கள் அனைவரும் இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப ரஷ்யாவுக்கோ உக்ரைனுக்கோ உத்தியோகபூர்வமாகப் பணி நியமனம் பெற்றுச் செல்லாத காரணத்தாலும் அந்த நாடுகளில் உள்ள தனியார் இராணுவங்களாலேயே இவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள் என்ற காரணத்தாலும் இவர்களைப் போர்க் களங்களில் இருந்து அரசுகள் இடையிலான ஒத்துழைப்பின் அடிப்படையில் மீட்பது இதுவரையில் வெற்றிகரமானதாக அமையவில்லை என்று தெரிவிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

இருப்பினும் தற்போது வந்துள்ள செய்தி மிகவும் புதியதும் அதிர்ச்சிகரமானதாகவும் இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து பிரான்ஸுக்கு அழைத்துச் செல்வதாக ஆட்கடத்தல்காரர்களால் ஏமாற்றப்பட்டுக் கூட்டிச் செல்லப்பட்டவர்கள் ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்று காவல்துறையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களும் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒரு இளம் குடும்பத் தலைவரும் இப்படி ரஷ்ய இராணுவத்தில் சிக்கிக் கொண்டுள்ளனர் என்று குருநகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவரின் தாயார் முறையிட்டுள்ளார். அந்த இளைஞரின் சகோதரி பிரான்ஸில் இருக்கும் நிலையில் அவரிடம் செல்வதற்காகச் சென்றவரை ரஷ்யா ஊடாக அழைத்துச் செல்வதாக ஏமாற்றி இராணுவத்தில் பலவந்தமாகச் சேர்த்துள்ளார்கள் என்று அவரது தாயார் குற்றஞ்சாட்டியுள்ளார். சுமார் ஒன்றரை மாத காலமாக அவர்கள் ரஷஷ்யப் படையில் சுயவிருப்பின்றிப் பணியாற்றி வருகின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்ய விமான நிலையத்தில் இறங்கி பின்னர் தரைவழியாக எல்லையைக் கடந்து பிரான்ஸிற்குள் சட்டவிரோதமாக நுழைய முடியும் என்று ஏமாற்றிய ஆள்கடத்தல்காரர்களே இவர்களை ரஷ்ய இராணுவத்தில் மாட்டிவிட்டிருக்கின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பயணத்திற்காக ஆள்கடத்தல்காரர்களுக்கு தலா 60 லட்சம் ரூபாய் பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆள்கடத்தல்காரர்களை நம்பி இப்படிப்பட்ட சட்டவிரோதப் பயணங்களை கடந்த மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாகத் தமிழ் மக்கள் மேற்கொண்ட வண்ணமே இருக்கின்றார்கள். வடக்கு கிழக்கில் நீண்ட போர், அரச பயங்கரவாதம், திட்டமிட்ட இன அழிப்பு என்பவற்றின் காரணமாக இந்தப் புலம்பெயர்வுகள் தொடர்ந்து நடந்துவந்தன. இப்போது போர் முடிந்த பின்னரும் பொருளாதார ரீதியில் வடக்கு கிழக்கு வளப்படுத்தப்படாமல் புறக்கணிக்கப்படுவதன் விளைவாக எமது இளைஞர்கள் அதே சட்டவிரோத வழிகளைப் பயன்படுத்தி ஆள்கடத்தல்காரர்களை நம்பி பொருளாதார அகதிகளாக மேற்கு நாடுகளுக்குச் செல்ல முயற்சிக்கிறார்கள். அவர்களின் இந்தக் கையறு நிலையைப் பயன்படுத்திக்கொண்டு அவர்களை ரஷ்யா ஏமாற்றிப் போரில் பயன்படுத்திக்கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது கண்டனத்துக்குரியது.

இவ்வாறு சென்று மாட்டிக்கொண்டுள்ளவர்களை, அவர்கள் சட்டவிரோதமாகச் சென்று மாட்டிக்கொண்டார்கள் என்று கைவிரித்துவிடாமல் மீட்டு அவர்களது குடும்பத்தினருடன் சேர்ப்பதற்கு ஆட்சியாளர்கள் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# “அநுர கோட்டா மாதிரியா?”

**உபுல் யோசப் பெர்னான்டோ**

”நான் நாட்டை 5 வருடங்கள் ஆட்சி செய்யத் தவறியதால் இங்கு வந்தேன். இரண்டு வருடங்கள் கழித்து இப்போது எதுவும் நடக்காதது போல் பேசிக்கொண்டிருக்கிறேன். மக்கள்தான் இந்த மாற்றங்களின் சூத்திரதாரிகள். நானாக இருந்தாலும்



சரி, எனது ஆளும்தரப்பில் உள்ள அமைச்சர்களாக இருந்தாலும் சரி, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் மூலம் நீங்கள் எதிர்பார்த்ததை அடையவில்லை என்றால், அதே பழைய குழுவை மீண்டும் கொண்டு வராதீர்கள். புதிய நபர்களைத் தேடுங்கள். அதனை எப்படிச் செய்வது என்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை...”

இதனைக் கூறியது கோட்டாபய ராஜபக்சவே. அன்றி அநுரகுமாரவோ டில்வின் சில்வாவோ அல்ல. நவம்பர் 10, 2021 அன்று அவர் இந்த அறிக்கையை வெளியிட்டார். அவர் இந்த அறிக்கையை வெளியிடும்போது, இலங்கையில் இருந்த ஒரே ஒரு புதிய குழு ஜே.வி.பி மட்டும்தான். கோட்டா ஜே.வி.பிக்கு வாக்களிக்கச் சொல்லவில்லை, ஆனால், புதிய குழுவைக் கண்டுபிடிக்கச் சொன்னார். அவர் பழைய குழுக்கள் என்று விளித்தது ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐ.தே.கவையே.



நவம்பர் 10, 2021 அன்று கோட்டா சொன்னதை, இன்று மக்கள் சரியாகச் செய்துள்ளனர்.

கோட்டாவிற்கும் அநுரவிற்கும் இடையில் ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகள் உள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாக 2015 ஆம் ஆண்டு தோல்வியடைந்த பின்னர் இருந்த ஸ்ரீலங்கா பொது ஜனபெரமுனவை மீளக்கட்டியெழுப்புவதற்கு கோட்டா பலம் சேர்த்தார். அதற்காகப் புதிய முகங்களை அறிமுகப்படுத்தினார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அதுவரை இல்லாத புத்திசாலித்தனமான இளம் முகங்களை அவர் அறிமுகப்படுத்தினார்.

ஜேவிபியின் வாக்கு வங்கி 3 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்த நிலையில் அதனை மீண்டும் கட்டியெழுப்ப தேசிய மக்கள் சக்தியை உருவாக்கினார் அநுர. அதில் புதிய முகங்களையும், புத்திசாலித்தனமான இளம் முகங்களையும் சேர்த்தார். கோட்டாவின் பிரபலமான பெண் கதாபாத்திரம் சீதா அரம்பேபொல. அநுரவின் பிரபலமான பெண் கதாபாத்திரம் ஹரினி அமரசூரிய.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உயிர்வாயு (ஒக்ஸிஜன்) கொடுப்பதற்காக வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் சமூகத்தை கோட்டா ஒன்றிணைத்தார். அவர்கள் மூலம் இலங்கை மக்களிடம் செல்வாக்குச் செலுத்தினார். 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும்போது, கோட்டாவுக்கு வாக்களிக்க ஆயிரக்கணக்கான வெளிநாட்டு இலங்கையர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்த நாடகத்தை அரங்கேற்றினார்.

அநுர ஜே.வி.பிக்கு உயிர்வாயு கொடுப்பதற்காக வெளிநாடுகளில் கூட்டங்களை நடத்தி, திசைகாட்டி மட்டுமே ஒரே வழி என்று கூறி வெளிநாட்டு இலங்கையர்கள் மூலம் இலங்கையில் இருந்தவர்களுக்கு அழுத்தம் கொடுத்தார். கோட்டாவைப் போலவே அவருக்கும் வாக்களிக்கப்பதற்காக வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அழைத்து வந்தார்.

’வியத் மகா’ என்ற அமைப்பின் ஊடாக இலங்கையில் உள்ள முக்கிய வர்த்தகர்கள் தன்னுடன் இருக்கின்றனர் என்று மக்களை நம்பவைக்க கோட்டா வர்த்தக மாநாடுகளை நடத்தினார். ’ஜோன் கீல்ஸ்’ நிறுவனத்தின் கிரிஷான் பாலேந்திரன் மற்றும் ’டயலொக்’ நிறுவனத் தலைவர் ஹன்ஸ் விஜேசூரிய போன்ற வர்த்தகர்கள் அந்த மாநாடுகளில் முக்கியமானவர்களாக இருந்தனர்.

அநுர ’வியத் மகா’வை உதாரணமாகக் கொண்டு வர்த்தக மாநாடுகளை நடத்தி நாட்டின் வர்த்தகர்கள் தன்னுடன் இருக்கிறார்கள் என்று காட்டினார். கோட்டாவின் பொருளாதார மாநாடுகளுக்கு வந்த வர்த்தகத் தலைவர்கள் அநுரவின் மாநாடுகளுக்கும் வந்தனர்.

சமூகவலைத்தளங்கள் மூலம் போட்டியாளர்களைத் தாக்கி தனது இமேஜை கட்டியெழுப்பியதன் மூலம் கோட்டா ஜனாதிபதியானார். அநுர ஜனாதிபதியாக வருவதற்கு சமூக ஊடகங்களை முழுமையாகப் பயன்படுத்தினார். கோட்டாவுடையதை விடவும் அநுரவுக்காகப் பணியாற்றிய சமூக ஊடக வலையமைப்பு அணி மிகவும் சுறுசுறுப்பாக இருந்தது. கோட்டா தனது பிம்பத்தை கட்டியெழுப்ப பயன்படுத்திய அதே சமூக ஊடக பலத்தை அநுரவும் பயன்படுத்தினார் என்பதுதான் உண்மை.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அநுரவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மிகப் பெரிய குற்றச்சாட்டு ஒன்றே ஒன்றுதான், அநுரவுக்கு ஆட்சி அனுபவம் இல்லை, அநுரா வந்தால் ஜே.வி.பியின் பயங்கரவாதம் ஆரம்பித்து நாடு குருதிச் சகதியாகிவிடும் என்பதாகும். 2019இல் கோட்டா ஜனாதிபதியானால் ஹிட்லராகி இராணுவ அரசை

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# "அநுர கோட்டா மாதிரியா?"

4ம் பக்கத் தொடர்ச்சி.......... அமைத்து இலங்கையை குருதிச் சகதிக்குள் மிதக்க மாற்றிவிடுவார் என்பது கோட்டா மீது சுமத்தப்பட்ட மிகப்பெரிய குற்றச்சாட்டு. கோட்டாவுக்கு ஆட்சியில் அனுபவம் இல்லை என்பது அடுத்த குற்றச்சாட்டு.



பிரதமராக இருந்த ரணில், 2019 ஜனாதிபதித் தேர்தலின்போது கோட்டா ஜனாதிபதியாவதற்கு உதவினார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான சஜித்தைத் தோற்கடிப்பதற்காக அவரது காலைப் பிடித்து இழுத்தார். அதே ரணில் அநுரவும் ஜனாதிபதியாக உதவினார். ரணில் முதலில் பொதுத் தேர்தலை நடத்தியிருந்தால் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெற்றிருக்கும். அதுமட்டுமல்ல, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிட்டதன் மூலம் சஜித்துக்குப் போட்டியாக நின்று, சஜித்துக்கு கிடைத்த சிறுபான்மை வாக்குகளைக் குறைத்து சஜித்தைத் தோற்கடித்தார். சஜித்துக்குச் சாதகமான சிறுபான்மை மக்கள் வாழ்ந்த மாகாணங்களில் மற்ற மாகாணங்களைவிட பரப்புரையை வலுப்படுத்தினார்.

எதிரிகள்சொன்னதுபோல்கோட்டாஹிட்லராகமாறவில்லை. அவர் ஒரு ஜனநாயகவாதி. ஜே.வி.பியின் பயங்கரவாதம் அநுர ஜனாதிபதியான போது ஆரம்பிக்கவில்லை. நாடு முன்பு இருந்ததை விட அமைதியாக இருந்தது.

கோட்டா ஜனாதிபதியான பின்னர், கோட்டா 'வியத் மகா'விடம்ஆலோசனைபெற்றாராஅல்லதுமொட்டுக்கட்சியின் தலைவர்களான ராஜபக்ச குடும்பத்தினரிடம் ஆலோசனை பெற்றாரா என்பது குறித்து பெரும் விவாதம் எழுந்தது. அநுர ஜே.வி.பியிடம் ஆலோசனை பெற்றுக்கொண்டாரா அல்லது பல்கலைக்கழக பேராசிரியர்கள் புதிய அணிக்கு ஆலோசனை வழங்கினரா என்ற கேள்வி இந்தப் பொதுத் தேர்தலின் பின்னர் எழுமா என்று இப்போதே கூறமுடியாது.

ராஜபக்சகுடும்பத்துக்கும்அவரதுநெருங்கியஆலோசகரான ஊடக நிறுவனங்களின் தலைவர் திலித் ஜயவீரவுக்கும் இடையிலான அதிகாரப் போட்டியில் கோட்டா சிக்கினார், திலித் 'வியத்மக'வுக்கு வழி வகுக்கும்படி கோட்டாவுக்கு ஆலோசனை வழங்கினார். கோட்டா ஒருமுறை ராஜபக்ச குடும்பத்தின் பக்கமும் ஒருமுறை திலித் ஜயவீரவின் பக்கமும் நின்றார்.

இந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு, அநுர, திசைகாட்டியின் (தேசிய மக்கள் சக்தி) பக்கமும் நிற்கிறார் டில்வின் தலைமையிலான ஜே.வி.பி. பக்கமும் நிற்கின்றார்.

கோட்டா ஜனாதிபதியாகிய பின்னர் ஆலோசனை பெறுவதற்காக வர்த்தகர்களின் குழுக்களை நியமித்தார். பொருளாதாரத்தை கட்டியெழுப்ப கோட்டாவால் நியமிக்கப்பட்ட பொருளாதார ஆலோசனைக் குழுவில் துமிந்த ஹூலங்கமுவ இருந்துள்ளார். 'டயலொக்' தலைவர் ஹன்ஸ் விஜேசூரிய பொருளாதார டிஜிட்டல் மயமாக்கல் குறித்து ஆலோசனை வழங்குவதற்காக அங்கு வந்திருந்தார். இன்று பொருளாதார டிஜிட்டல் மயமாக்கலுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட கோட்டாவின் வர்த்தகர்களையே அநுரவும் தனக்கு ஆலோசகர்ளாக நியமித்துள்ளார். அனுரவின் பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ. டிஜிட்டல் மயமாக்கல்ஹான்ஸ்விஜேசூரியவிடம்ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கிக் கொள்ளை தொடர்பில் விசாரணை செய்யவும், சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைத் தண்டிக்கவும், மத்திய வங்கிக் கொள்ளையினால் நாடு இழந்த செல்வத்தை மீட்பதற்காகவும் என்று கூறிக்கொண்டுதான் கோத்தா ஜனாதிபதியானார்.

உகண்டாவில்ராஜபக்சகுடும்பம்மறைத்துவைத்திருக்கும் பணத்தை மீளக் கொண்டு வந்து கடனிலிருந்து நாட்டை மீட்போம், ஈஸ்டர் தாக்குதலின் மூளையாக செயல்பட்டவர் கைது செய்யப்படுவார், மத்திய வங்கிக் கொள்ளைக்கு மூளையாகச் செயல்பட்டவர் கைது செய்யப்படுவார் என்று கூறிக்கொண்டுதான் அநுரவும் ஜனாதிபதியாகி இருக்கிறார்.

கோத்தாவும் 6.9 மில்லியன் பெற்றார். அநுரவும் அதே அளவு வாக்குகளைப் பெற்றுள்ளார். அப்படியானால்...

### "அநுர கோட்டா மாதிரியா...?"

கோட்டா ஓர் இராணுவ அதிகாரி. அநுர ஒரு சிறந்த அரசியல்வாதி. கோட்டாவுக்கு அரசியல் தெரியாததால் தவறு நடந்துள்ளது. மேலும், கோட்டாவுக்குக் கட்சி இல்லை. ஆனால் அநுர, சந்திரிக்கா, மஹிந்த, ரணில் ஆகியோருடன் இணைந்து செயற்பட்டு அரசியல்வாதியாக மாறிய ஒருவர். அநுரவைப் பாதுகாக்க, நாட்டில் இரண்டு கிளர்ச்சிகளை நடத்திய ஒரு கட்சி உண்டு. அநுர கோட்டாவாக இல்லாததற்கு அதுவே மிகப்பெரிய மற்றும் ஒரே காரணம்.



காலைக்கதிர் Kalaikkathir

# தலைமன்னார் விலுப்பட்டான் குடியிருப்பு கிராம மக்கள் வீதி மறியல் போராட்டம்

## வெள்ள நீரை வெளியேற்றக் கோரிக்கை



மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள துள்ளுக்குடியிறுப்பு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட பாவிலுப்பட்டான் குடியிருப்பு கிராம மக்கள் தமது கிராமத்தில் தேங்கியுள்ள வெள்ள நீரை வெளியேற்றக் கோரி ஞாயிற்றுக்கிழமை மதியம் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த கிராமத்தில் 108 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

குறித்த கிராம மக்கள் தமது கிராமத்தில் தேங்கியுள்ள வெள்ள நீரை வெளியேற்றக் கோரி மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்

மேலும் குறித்த கிராமத்திற்குச் செல்லும் பாதைக்கு அமைக்க நீர் வெளியேறிச் செல்லும் மதகை (போக்) அவ்விடத்தில் கொண்டு வரப்பட்டு 4 வருடங்களாகிய நிலையில் அவற்றை உரிய முறையில் செப்பனிடவில்லை.

குறித்த நடவடிக்கையை முன்னெடுத்தால் வெள்ள நீர் தமது கிராமத்தில் தேங்காது எனவும், குறித்த நடவடிக்கையை உடன் ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

மேலும் வெள்ள நீரை தமது கிராமத்தில் இருந்து வெளியேற்ற அதிகாரிகள் யாரும் முன்வரவில்லை என அந்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியூடாக போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

எனினும் தலை மன்னார் பொலிஸார் மற்றும் கிராம அலுவலர் குறித்த பகுதிக்கு வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடினர்.

இந்தப் பிரச்சினை குறித்து உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்து துரித நடவடிக்கைகள் மேற்கொள்வதாக பொலிஸார் மற்றும் கிராம அலுவலர் மக்களிடம் தெரிவித்தனர்.

இந்த நிலையில் போராட்டம் கைவிடப்பட்டது. அதனை தொடர்ந்து அதிகாரிகள் குறித்த பகுதிக்கு வருகை தந்து துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

# ஹெரோயின் போதைப்பொருளுடன் மொரட்டுவையில் ஒருவர் கைது

மொரட்டுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொரலவெல்ல பிரதேசத்தில், ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் , கொரலவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடம் இருந்து , 05 கிராம் 210 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான, மேலதிக விசாரணைகளை மொரட்டுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மு.கா. கட்சியில் இருந்து ஹரீஸ் இடைநிறுத்தம்



(அபு அலா)

ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரஸின் உறுப்பினர் பதவியிலிருந்து, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

கட்சியின் செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பர் இதுதொடர்பான கடிதத்தை ஹரீஸுக்கு அனுப்பியுள்ளார்.

கட்சியை, கட்சித்தலைவரையும் பொதுவெளியில் விமர்சித்த காரணத்தால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக செயலாளர் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த செயற்பாடு தொடர்பில் நியாயப்படுத்தும் காரணங்கள் இருப்பின் அதனை விளக்குமாறுஅந்தக் கடிதத்தில் குறிப்பிட்டு ஹரீஸுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# சூறாவளி வதந்திகளை நம்பி ஏமாறவேண்டாம்

## மட்டு. மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய பிரதிப் பணிப்பாளர்



(பாறுக் ஷிஹான்)

சூறாவளி உருவாகி திங்கட்கிழமை இரவு 2.00 மணிக்கு கல்முனையை தாக்கும் என்று பரப்பப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம் என அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

சூறாவளி ஒன்று உருவாகும் பட்சத்தில் மக்களுக்கு அது தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஊடாக உடனடியாக அறிவிக்கப்படும் என்பதைனை மிகவும் பொறுப்புடன் அறியத்தருகின்றோம். சூறாவளி உருவாகி திங்கள் இரவு 2 மணிக்கு கல்முனையை தாக்கும் என்று பரப்பப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம்.

மேலும் வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக அதிக மழைவீழ்ச்சி கிடைக்கக்கூடிய வாய்ப்பு காணப்படுவதால் அனைவரும் வெள்ள அனர்த்தத்துக்குரிய முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரூ. 90 லட்சம் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் கட்டுநாயக்காவில் ஒருவர் கைது

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகளை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குக் கொண்டு வந்து கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்ல முயன்ற பயணி ஒருவர் விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவினரால் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் , மொரவக்க பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடையவர் ஆவார்.

இவர் ஞாயிற்றுக்கிழமை 12.10 மணியளவில் டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரின் பயணப்பொதியில் இருந்து 39,980 ‘மென்செஸ்டர்’ ரக சிகரெட்டுகள் மற்றும் 20,000‘பிளாட்டினம்’ ரக சிகரெட்டுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டுஉற்பத்திசிகரெட்டுக்களை சட்டவிரோதமாக இறக்குமதி செய்தமை, வைத்திருந்தமை மற்றும் கடத்தல் ஆகிய குற்றச்சாட்டின் பேரில் எதிர்வரும் 27 ஆம் திகதி நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# படகு கவிழ்ந்ததால் தந்தை, மகள் மாயம்

## நீர்கொழும்பில் துயரம்

நீர்கொழும்பு முன்னக்கரை களப்பு பகுதியில் சிறிய ரக படகொன்று மற்ற படகுடன் மோதி கவிழ்ந்ததில் தந்தை, மகள் என இருவர் காணாமல்போன சம்பவம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

7 பேர் பயணித்த இப்படகு கவிழ்ந்ததையடுத்து, 5 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், 50 வயதுடைய தந்தையும் 20 வயது மகளும் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட 5 பேரும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டதையடுத்து, அவர்களில் மூவர் சிகிச்சை பெற்றுக்கொண்டு மருத்துவமனையிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இதேவேளை, காணாமல்போன தந்தையையும் மகளையும் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

# வலம்புரி சங்கை ஒரு கோடி ரூபாய்க்கு விற்பனை செய்ய முயன்ற நபர் கைது



மாத்தறை, திஹகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அபரெக்க அதிவேக வீதிக்கு அருகில் அரிய வகை வலம்புரி சங்கு ஒன்றை ஒரு கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற சந்தேக நபரொருவர் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்திய ஊழல் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஹங்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடையவர் ஆவார்.

இதனையடுத்து சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக திஹகொட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திஹகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்து மறு அறிவித்தல் வரை இடம்பெறாது

### பிரதேச செயலகம் அறிவிப்பு

நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்து நேற்று (திங்கட்கிழமை) காலை முதல் மறு அறிவித்தல் வரும் வரை இடம்பெறமாட்டாதென நெடுந்தீவு பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலை செல்லவேண்டியவர்கள், அரசஉத்தியோகத்தர்கள்மற்றும்பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலையே இதற்குக் காரணமாகும்.

## காணாமல்போயிருந்த ஒருவர் வயலிலிருந்து சடலமாக மீட்பு

மாத்தளைபொலிஸ்பிரிவுக்குஉட்பட்ட ஒவிலிகந்தபிரதேசத்தில்உள்ளவயலிலிருந்து ஞாயிற்றுக்கிழமைஆணொருவர்சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை ஒவிலிகந்த பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நபரொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த 23 ஆம் திகதியிலிருந்து காணாமல் போயிருந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமானது மாத்தளை வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இரு பஸ்கள் மோதி ஹற்றனில் விபத்து

## நால்வர் காயம்



(கிஷாந்தன்)

அதிவேகமாக பயணித்த தனியார் பஸ் ஒன்று எதிர்த்திசையில் வந்த இ.போ.ச பஸ்ஸுடன் மோதியதில் தனியார் பஸ்ஸின் பின் பகுதி உடைந்துள்ளதோடு, நால்வர் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை கரோலினா தோட்ட பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) காலை 6.40 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஹற்றன் இ.போ.ச டிப்போவிற்கு சொந்தமான, கினிகத்தேனையிலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்ற பஸ்ஸும், ஹற்றனிலிருந்து கண்டி நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸும் இவ்விபத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

ஹற்றனிலிருந்து கண்டி நோக்கி அதிவேகமாகச் சென்ற தனியார் பஸ் இ.போ.ச பஸ்ஸை எதிர்திசையில் வந்ததை கண்டு பஸ் பிரேக் போட்டதில் தனியார் பஸ்ஸின் பின்பகுதி நழுவி இ.போ.ச பஸ்ஸின் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. தனியார் பஸ்ஸின் பின்புறம் இரண்டாகப் பிரிந்துள்ளதாக இந்த விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த நால்வரின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும், நிலவும் மோசமான வானிலையுடன் ஹற்றன் கொழும்பு பிரதான வீதி மற்றும் ஏனைய சில வீதிகள் வழுக்கும் தன்மையுடன் இருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தில் தனியார் பஸ்ஸுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் வட்டவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

## மன்னிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருத்தமளிக்கின்றது என்றும் தெரிவித்தார்.

புதியநாடாளுமன்றஉறுப்பினர்களுக்காக நேற்று நடைபெற்ற திசைமுகப்படுத்தல் செயலமர்வில் அவர் மன்னிப்புக் கோரினார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

எங்கே அமர வேண்டும் என்று கேட்டேன். மறுபுறம் போய் அமருங்கள் என்று சொன்னார்கள். எந்த பிரச்சினையும் இல்லை டொக்டர், நீங்கள் எங்கே வேண்டும் என்றாலும் அமருங்கள் என்று கூறினார்கள். நான் முன்னே சென்று அமர்ந்தேன்.

எமக்கு பல்கலைக்கழகம் சென்றுதான் பழக்கம். கையை உயர்த்தி நாடாளுமன்றத்துக்கு வரவில்லை. எங்கு வேண்டுமானாலும் போய் உட்காரலாம் என்று நினைத்தேன். அப்போது நாலு பேர் வந்து என்னுடன் பேசினார்கள். எதிர்க்கட்சித் தலைவர் தினமும் உட்காரும் நாற்காலி இது என்று என்னிடம் சொன்னார்கள். பிறகு மற்றைய நாற்காலியில் உட்காரலாம் என்று நினைத்தேன். நான் 8ஆவது நாற்காலியில் போய் உட்கார எந்த காரணமும் இல்லை.

எல்லா ஊடகங்களிலும் என்னைப் புலி என்று அழைத்தது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் நாற்காலியில் புலி ஒன்று வந்து அமர்ந்துள்ளது என்று கூறியுள்ளார்கள். நான் வேண்டுமென்றே இப்படிப் போய் உட்காரவில்லை. எனக்கு அணியொன்று இல்லை. நான் சுயேச்சையாக வந்தேன். அதனால் எங்கு உட்காருவது, எப்படிச் செல்வது என்று தெரியவில்லை.

அவ்வாறு நான் செய்த தவறுக்காக பகிரங்கமாக மன்னிப்பு கேட்க விரும்புகிறேன். மன்னிக்கவும். வேண்டுமென்றே அந்த நாற்காலியில் உட்கார நான் எதிர்பார்க்கவில்லை. அத்துடன் நான் தனியாகவே அனைத்து இடங்களுக்கும் செல்கின்றேன். எனது பாதுகாப்பு தொடர்பில் கேள்விகள் எழுந்துள்ளன. அதுபற்றி கவனம் எடுக்குமாறும் கோருகின்றேன் என்றார்.

இச்சமயத்தில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம், பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஊடாக உங்களுக்கான பாதுகாப்புக்கோரிக்கையை முன்வைக்கும்போது ஆராய்ந்து அது தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

## தவறிழைத்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வெளியேற்ற கட்சியின்தலைமைக் குழு காய் நகர்த்தி வருவதைக் கண்டித்தே வினோ இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார்.

கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான விந்தன் மற்றும் கட்சியின் துணைத்தலைவரும்கல்முனைமாநகரசபை முன்னாள் உறுப்பினருமான ஹென்றி மகேந்திரன் ஆகியோரைக் கட்சியைவிட்டு வெளியேற்றவேண்டும் என்று கட்சியின் பொருளாரான சுரேன் குருசாமி அண்மையில் நடந்த கட்சியின் தலைமைக் குழுக் கூட்டத்தில் பிரேரணை ஒன்றை முன்வைத்திருந்தார். இந்த விவகாரம் வெளியானதைத் தொடர்ந்து கட்சிக்குள் கிளர்ச்சி மேலும் பலப்பட்டுள்ளது.

கட்சிக்குள் தலைமைக்கு எதிராகப் பலப்பட்டுவரும் கிளர்ச்சியை அடுத்தே வினோ மத்திய குழு அல்லது பொதுக் குழுவைக் கூட்டும்படி தலைவருக்கும் செயலாளருக்கும் கடிதம் எழுதியுள்ளார். அவர் அதில் தெரிவித்துள்ளதாவது:

அண்மைக் காலமாகக் கட்சியின் நடவடிக்கைகள், கட்சியின் தவறான செயற்பாடுகள் காரணமாக கட்சியின் உறுப்பினர்கள் மத்தியில் விமர்சனங்களும் அதிருப்தி நிலைப்பாடுகளும் ஏற்பட்டு அதன் விளைவாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாம் படுதோல்வியைச் சந்திக்க நேர்ந்தது. இதற்கான முழுப் பொறுப்பையும் நான் உட்பட தலைமைக் குழு ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

தலைமைக் -குழுவில் சில பதவி நிலையினரின் எதேச்சாதிகாரப் போக்கு கட்சியை எங்கேயோ கொண்டு சென்று விட்டுள்ளது. கட்சியின் தலைமைக் குழு தவறிழைக்கின்றவேளை, மீண்டும் மீண்டும் தலைமைக்குழுவைக்கூட்டிதப்பிக்க முடியாது. இதற்கானதீர்வாக மத்திய குழுவையும் பொதுக் குழுவையும் கூட்டி உறுப்பினர்கள் மத்தியில் உள்ள சந்தேகங்கள் களையப்படவேண்டும். கட்சிக்குள்ளும் வெளியிலும் முன்வைக்கப்படும் சந்தேகங்கள் களையப்படவேண்டும்.

எமது கட்சியினதும் எமது கூட்டுக் கட்சியினதும் பெரும் பின்னடைவுக்கான காரணங்களை மக்களின் நிராகரிப்புக்கான காரணங்களை ஆராய வேண்டும். எனவே தலைமைக் குழுக் கூட்டத்தினை நடத்துவதை நிறுத்தி மத்திய குழுவையோ பொதுக் குழுவையோ உடனடியாகக் கூட்டி கட்சியின் மீதுள்ள சந்தேகங்களைக் களைந்து, கட்சி மறுசீரமைப்புச் செய்யத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார்கல்கிஸைநீதிவான்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க, தெஹிவளையில் தேசிய தொழிலாளர் நிறுவனத்தின் தொழிற்சங்கத்துக்குச் சொந்தமான இரண்டுமாடி கட்டடத்துடன் கூடியசொத்தை குத்தகைக்குப்பெறுவதற்காகப் போலி பத்திரத்தை பயன்படுத்தினார் என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மோசடிவிசாரணைப்பணியகம் அண்மையில் விசாரணைகளை ஆரம்பித்தது.

தொழில் பிரதியமைச்சரும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளருமான மஹிந்த ஜயசிங்க மற்றும் இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜயலால் ஆகியோரை வாக்குமூலம் வழங்க வருமாறு தாம் கடிதம் அனுப்பினர் என்றும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். ஆனால் வர்த்தக அமைச்சர் வாக்குமூலம் தர வரவில்லை என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



## கிளிநொச்சி வெள்ளத்தால்

# பாதிக்கப்பட்டவர்களுக்கு உரும்பிராய் லயன்ஸ் உதவி



உரும்பிராய் லயஸ் கழகத்தின் தலைவர் லயன் ம.மயூரதனின் நிதி அனுசரணையில் கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மக்களிற்கான தரைப்பாள் தேவை என நெல்லியடி லயன்ஸ் கழக உறுப்பினரும் பருத்தித்துறை சிதம்பரக் கல்லூரி யின் புகழ்பூத்த அதிப ருமாகிய லயன் பரமேஸ்வரன் அவர்களினூடாகலயன் மயூரதனிடம்முன்வைக் கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகஉடனடியாக 50 ஆயிரம் ரூபா நிதிப்பங்களிப்பில் நிறைவேற்றப்பட்டது.

லயன் மயூரதன் தேவைப்பாடுடைய மக்களின் தேவைகருதி தனது முழுமையான, அர்ப்பணிப்பான சேவையாக உரும்பிராய் லயன்ஸ் கழகத்தின் ஊடாக மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# திருகோணமலை சம்பூர் கலாசார மண்டபத்தில் மாவீரர்களின் பெற்றோர்களுக்குக் கௌரவிப்பு





(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்களை மதிப்பளித்து கௌரவிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை சம்பூர்கலாசாரமண்டபத்தில்இடம்பெற்றது. இதனை சம்பூர் - ஆலங்குளம் மாவீரர் நாள் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு ஏற்பாடு செய்திருந்தது.

நிகழ்வின் ஆரம்பத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள் மலர் தூவி விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு கௌரவப்படுத்தப்பட்டனர். இதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்களால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு உயிர்நீத்த உறவுகளுக்காக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.



இதன்போது திருகோணமலை மாவட்டத்தைச்சேர்ந்த350மாவீரர்களின் பெற்றோர்களுக்கு தென்னைமரக் கன்றுகள்வழங்கப்பட்டிருந்தன. அத்தோடு அவர்களது குடும்பங்களுக்கான மதிய போசனமும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன், மாவீரர்களின் பெற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயின் போதைப்பொருளுடன் பேலியகொடயில் ஒருவர் கைது

பேலியகொட பொலிஸ்பிரிவுக்குட்பட்ட போரனுகொடுவத்த பிரதேசத்தில் , ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேலியகொட பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், கொழும்பு 14 பகுதியைச் சேர்ந்த 25 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடம் இருந்து, 05 கிராம் 700 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான, மேலதிக விசாரணை களை பேலியகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விகாரைகளை உடைத்து திருட்டிய சந்தேகநபர்கள் இருவர் கைது



இரத்தினபுரி மாவட்டத்தில் பத்து விகாரைகளை உடைத்து இலத்திரனியல் உபகரணங்கள் உட்பட பல பொருள்களைத் திருடியநபருடன்வாழ்ந்தபெண் ணொருவரும் தனியார் பஸ் சாரதியும் பெல்மடுல்ல பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

விகாரைகளின் தர்ம மண் டபங்களுக்கு வெளியில் இருந்த ஒலிபெருக்கிகள், மின்விசிறிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்ற பல பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்களை இக்குழுவினர் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திட்டமிட்ட திருட் டுக்கு நீண்ட தூர தனியார் பஸ்களின் சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் உதவியை யும் பிரதான சந்தேக நபர் பெற்றுள்ளார் என விசாரணை களில் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உதவி பெற்ற கொழும்பு மொனராகலை தனியார் பஸ்ஸின் சாரதி ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் பல பஸ் உதவியாளர்கள் கைது செய்யப்பட உள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டுகளுக்கு கொழும்பு மொனராகலை தொலைதூர பஸ் சேவை ஊழியர்களின் உதவிகளை எதிர்ப்பார்த்து இரவு மற்றும் அதிகாலை வேளைகளில் விஹாரைகளை உடைத்து பொருள்களைத் திருடுகின்றனர்.

கஹவத்தை, பெல்மடுல்ல மற்றும் இரத்தினபுரி பிரதே சங்களின் பிரதான வீதியிலுள்ள விஹாரைகளில் பிரதான சந்தேகநபர்மற்றும்பெண்ணுடன் இணைந்துதிருட்டுச்சம்பவங்கள் செய்துள்ளார்.

சனிக்கிழமை அதிகாலை, பெல்மடுல்ல ரில்ஹேன விஹா ரையின் தர்ம மண்டபத்தில் அதிகாலை இரண்டு மணிய ளவில் நுழைந்து மின் உபகர ணங்களைதிருடி செல்லும்போது விஹாராதிபதி தேரர் அப்பகு தியில் உள்ள முக்கிய நபர்களுக் கும் பொலிஸாருக்கும் அறிவித்த தையடுத்துஹெலியகொடையில் வைத்து சந்தேக நபர்களை மிக சூட்சுமமான முறையில் கைது செய்துள்ளார்கள்.

பிரதான சந்தேக நபரும் அவருடன் இருந்த பெண்ணும் போதைப்பொருளுக்கு அடிமை யானவர்கள் எனவும் சந்தேக நபர் கடுவெல பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# தண்ணிமுறிப்பு குள அணைக்கட்டை பாதுகாக்க நடவடிக்கைகள் தீவிரம்

முல்லைத்தீவு மாவட்டத் திலுள்ள தண்ணிமுறிப்பு குளத்தின் அணைக்கட்டு உடைப் பெடுக்காத வகையில் அதனைப் பாதுகாக்கும் முன்னாயத்த ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

தண்ணிமுறிப்பு குளத்தின் அணைக்கட்டு உள்பக்கமாக சில இடங்களில் அரிப்பு ஏற்பட்டுள் ளதையடுத்து அணைக்கட்டு, குளத்தைப் பாதுகாப்பதற்காகத் தற்காலிகமாக மண்மூடைகள் போடப்பட்டு, பாதுகாப்பு வேலி அமைக்கும் வேலைத்திட்டத்தை நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் இராணுவத்தினரோடு இணைந்து பாதுகாக்கும் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

தண்ணிமுறிப்பு குளமானது 21 அடி வரை நீரைச் சேமிக்கக் கூடியதாக இருக்கின்ற நிலையில் தற்போது 14.6 அடி வரை நீர் மட்டம் உயர்ந்த நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# கொழும்பு துறைமுக கிழக்கு முனைய திட்டத்திற்கு நிதி பெறுவதில் சிக்கல்

## அதானி நிறுவனத்திற்கு கடன் தர அமெ. நிறுவனம் தயக்கம்

இலங்கையில் அதானி குழுமத்தின் ஆதரவுடனான துறைமுக அபிவிருத்தி திட்டத்திற்கு 500 மில்லியன் டொலர்களை வழங்க முன்வந்த அமெரிக்க நிறுவனம் கௌதம் அதானி உட்பட அதானி குழுமத்தினருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை தொடர்ந்து துறைமுக அபிவிருத்தி திட்டம் குறித்து ஆராய்ந்துவருவதாக தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம் என்ற அமைப்பு இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ள துறைமுக அபிவிருத்தி திட்டத்திற்கு கடன்வழங்குவது குறித்து இன்னமும் இறுதிமுடிவை எடுக்கவில்லை என அதிகாரியொருவர்தெரிவித்துள்ளார்.

கடன் வழங்குவதற்கு முன்னர் திட்;டத்தின் அனைத்துஅம்சங்களும்எங்களின்கடுமையான தராதரங்களை பின்பற்றப்படுவதை உறுதி செய்வதற்காக நாங்கள் தொடர்ந்தும் ஆராய்ந்துவருகின்றோம் என தெரிவித்துள்ள அமெரிக்க நிறுவனத்தின் அதிகாரியொருவர் இந்த திட்டத்திற்கான நிதிகடன் தொடர்பில் இறுதித் தீர்மானத்தை எடுக்கவில்லை இறுதி உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம் அதானி குழுமமும் இலங்கையின் தலைநகரில் முன்னெடுத்துள்ள துறைமுக அபிவிருத்தி திட்டத்திற்கு உதவப்போவதாக அறிவித்திருந்தது.

ஆசியாவில் அந்த நிறுவனத்தின் மிகப்பெரிய முதலீடாக இது கருதப்பட்டது.



# வவுனியா ராமயன்குளம் உடைப்பெடுக்கும் அபாயம்

### முற்பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட விவசாயிகள்

வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தில் அமைந்துள்ள ராமயன்குளம் குளம்உடைப்பெடுக்கும்அபாயம்காணப்படுவதாககிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அப்பகுதி கம நல சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய விவசாயிகள் உடனடியாக அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

100ஏக்கருக்கு மேற்பட்ட வயல்நிலத்தை கொண்ட ராமயன்குளம் அதிகளவான மழை வீழ்ச்சியின் காரணமாக உடைப்பெடுக்கும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது.

எனவே, இப் பேரிடரை தடுக்கும் முகமாக விவசாயிகளினால் மண் மூடைகள் அடுக்கி முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (100)

# கிளிநொச்சியில் மழையால் 248 குடும்பங்கள் பாதிப்பு

கிளிநொச்சியில் சீரற்ற வானிலையால் காரணமாகதொடர்ச்சியாகபெய்துவருகின்ற கனமழை காரணமாக வீதிகள் மழைநீர் பெருக்கெடுத்து ஓடுவதால் தாழ்வான பகுதியில் உள்ள மக்கள் கடும் சிரமத்துக்கு மத்தியில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டு காணப்படுகின்றார்கள்.

அந்த வகையில் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவுக்குஉட்பட்டமாவடி அம்மன்,கனகபுரம், தொண்டமா நகர், பாரதிபுரம், திருநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய கிராமங்களும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிக்கப்பட்ட பிரமந்தன்னாறு, கோரக்கண்கட்டு, தருமபுரம் கிழக்கு, உமையாள்புரம் ஆகிய இரண்டு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 248 குடும்பங்களைச் சேர்ந்த 717 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 04 வீடுகள் பகுதி அளவு சேதம் அடைந்துள்ளன என மாவட்ட அனர்த்த முகாமைத்துவம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக கனமழை பெய்து வந்தாலும் மாவட்டத்தில் உள்ள பாரிய குளங்களுக்கு நீர்வரத்தின்மையால் குளங்களிலிருந்து வெள்ளம் ஏற்படக்கூடிய எந்த சாத்திய கூறுகளும் இல்லை என மாவட்ட அனர்த்த முகாமத்துவம் தெரிவித்துள்ளது. (113)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.11.2024இல் வெளியிடப்பெற்றது